3. உலகைக் கண்டு அஞ்சாதே அஞ்சாதே
தூய ஆவி துணை இருப்பாரு

- திரு. விக்டர், சென்னை

## பாடல் - 8 - வாரத்தின் முதல் நாள்

வாரத்தின் முதல் நாள் கல்லறைக்குப் போனா
திறந்து கிடந்தது
எட்டி உள்ளே பார்த்தா இயேசுவைக் காணோம்
உயிர்த்து எழுன்திட்டாரு

1. சொன்னபடி உயிர்த்தெழுந்தார்
இயேசு உயிர்த்தெழுந்தார்
மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்
இயேசு உயிர்த்தெழுந்தார்

2. சாவை வென்று உயிர்த்தெழுந்தார்
இயேசு உயிர்த்தெழுந்தார்
சாத்தானை வென்று உயிர்த்தெழுந்தார்
இயேசு உயிர்த்தெழுந்தார்

- திரு. விக்டர், சென்னை

## பாடல் - 9 - ஜிங்கிடி சிக்கா ஜிங்கிடி சிக்கா

ஜிங்கிடி சிக்கா ஜிங்கிடி சிக்கா ஜிங்கிடி சிக்கா லே
ஜிங்கிடி சிக்கா ஜிங்கிடி சிக்கா ஜிங்கிடி சிக்கா லே
நல்ல புள்ள நாங்க
செல்ல புள்ள நாங்க
சுட்டி புள்ள நாங்க
அன்புள்ள நாங்க
இயேசுவுக்கு எங்க மேல கொள்ள ஆசைங்க
அதனால அவர் சொன்னா எதையும் செய்வாங்க

1. அம்மா சொன்னா கேட்போம்
அப்பா சொன்னா கேட்போம்
டீச்சர் சொன்னா கேட்போம்
நீங்க சொன்னாலும் கேட்போம்
எப்போதும் நாங்க கீழ்ப்படிவோம்
அதுதான் இயேசுவுக்கு ரொம்ப பிடிக்கும்

2. பொய் பேச மாட்டோம்
எதையும் திருட மாட்டோம்
தீங்கு எண்ண மாட்டோம்
சீட் பண்ண மாட்டோம்



# தமிழக விவிலியப் பணிக்குழு வழங்கும்
# “கூடுவோம்... கொண்டாடுவோம்”
# VBS - 2024 பாடல்கள்

## பாடல் - 1 - கூடுவோம் கொண்டாடுவோம்

கூடுவோம் கொண்டாடுவோம்
VBSஐக் கொண்டாடுவோம்
ஜாலியாக பண்பாடிக் கொண்டாடுவோம்
ஜாலியாக VBSஐக் கொண்டாடுவோம்

ஆடுவோம் பாடுவோம் மகிழ்ந்திடுவோம்
அனைவரும் VBSஐக் கொண்டாடுவோம்

1. விவிலிய விழாக்களைக் கொண்டாடுவோம்
வீதியெங்கும் கொண்டாடி மகிழ்ந்திடுவோம்
நீதிமொழி கூறுகின்ற விவிலியத்தை
நித்தம் நித்தம் வாசித்து கடைபிடிப்போம்
ஆடுவோம்...

2. இதயத்தை ஈர்க்கின்ற இறைவாக்கினர்
உரைக்கின்ற செய்தியை ஏற்றுக்கொள்வோம்
விவிலியப் பெண்களின் பெருமைகளை
விவரமாய் படித்து புரிந்து கொள்வோம்

- பா : வேதியர். பேரா. தி.ம. சந்தியாகு, *முப்பணி மையம்*
பண் : திரு. விக்டர், *சென்னை*

## பாடல் - 2 - பயணம் போகுது

பயணம் போகுது - பெரும் பயணம் போகுது
அடிமை நாட்டை விட்டு விட்டு பயணம் போகுது
பயணம் போகு - பெரும் பயணம் போகுது
கானான் நாடு நோக்கி பயணம் போகுது

1. அடிமை வாழ்வு முடிந்து போனது
உரிமை வாழ்வு கிடைத்து விட்டது

2. மேகத் தூணும் பகலில் காத்தது
நெருப்புத் தூணும் இரவில் காத்தது

3. செங்கடலும் வழியை விட்டது
பாலைநிலத்தில் மன்னா கிடைத்தது

4. பாறை நீரும் குடிக்கக் கிடைத்தது
காடைகளும் கடிக்கக் கிடைத்தன

- திரு. விக்டர், சென்னை

### பாடல் - 3 - பிறந்தாரு பிறந்தாரு பாலன் பிறந்தாரு

பிறந்தாரு பிறந்தாரு பாலன் பிறந்தாரு
நம்மை மீட்கவே பிறந்தாரு - 2
மாட்டுக் குடிசையிலே பிறந்தாரு
மார்கழிக் குளிரிலே பிறந்தாரு - 2
யாரு? இயேசய்யா... இயேசய்யா... இயேசய்யா... - 2

1. விடுதியில் அவருக்கோ இடமில்ல
மாட்டுக் கொட்டகையே கிடைச்சது - 2
தீவனத் தொட்டியே தொட்டிலாய்
துணிகளால் சுற்றி வைத்தனரே - 2
யாரு? இயேசய்யா... இயேசய்யா... இயேசய்யா... - 2

2. இரவு குளிரில் இடையர்க்கு
திடீரென ஒரு வெளிச்சம் தோன்றியது - 2
அஞ்சாதே என்று வானதூதர்
மகிழ்ச்சி நற்செய்தி அறிவித்தாரே - 2
யாரு? இயேசய்யா... இயேசய்யா... இயேசய்யா... - 2

3. இடையர்கள் வேகமாய் சென்றனரே
குட்டி இயேசுவைக் கண்டனரே - 2
வாருங்கள் நாமும் செல்வோம் பெத்தலகேம்
மீட்பரைக் கண்டு மகிழ்ந்திடுவோம் - 2
யாரு? இயேசய்யா... இயேசய்யா... இயேசய்யா... - 2

- பா : சகோ. எட்வின்; பண் : சகோ. ஜான் பிரிட்டோ,
புனித பேதுரு பாப்பிறை குருமடம், பெங்களூர்

### பாடல் - 4 - வாங்க வாங்க வாங்க

வாங்க வாங்க வாங்க - நீங்க
வாங்க வாங்க வாங்க
பெத்லகேம் போகலாங்க
வாங்க வாங்க வாங்க - நீங்க
வாங்க வாங்க வாங்க - குழந்தை
இயேசுவைப் பார்க்கலாங்க

மாட்டுக் குடிலிலே பிறந்துள்ள
இயேசுவைப் பார்க்க வாங்க
வானதூதர் அறிவித்த
இயேசுவைப் பார்க்க வாங்க



இடையர்களும் வந்து வணங்கிய
இயேசுவைப் பார்க்க வாங்க
ஞானிகளும் ஆராதித்த
இயேசுவைப் பார்க்க வாங்க

- திரு. விக்டர், சென்னை

### பாடல் - 5 - தாவீதின் ஊரிலே

தாவீதின் ஊரிலே ஒரு ராஜகுமாரன் - 2
என்னை ஆள வந்தவர் என்நேசக் குமாரன் - 2

1. சாரோனின் ரோஜா அவர் லீலிபுஷ்பமே - 2 - அந்த
அழகை சொல்லிப் புகழ என் வார்த்தைப் போதாதே - 2

2. நமக்காக மரிக்கவே அந்த குழந்தை பிறந்தது - 2
பாவம் சாபம் அது மன்னிக்க வந்தது - 2

3. ராஜாதிராஜன் அவர் துதிக்கப் பாத்திரர் - 2
துதி செய்து தேவ தேவனை ஆராதனை செய்வோம் - 2

- இளங்குருமட மாணவர்கள், சென்னை - மயிலை உயர்மறைமாவட்டம்

### பாடல் - 6 - வாங்க, வாங்க... அறுவடைக்கு வாங்க

வாங்க, வாங்க,... அறுவடைக்கு வாங்க
காலம் வந்திடுச்சி, நேரமாகிடுச்சி
அறுவடைக்கு வாங்க - 2

1. கடவுளுக்கு நன்றி சொல்லி பூமியை தொட்டு வணங்கி
ஒன்றாய் சேர்ந்திடுவோம் அறுவடை செய்திடுவோம்
காணிக்கைத் தந்திடுவோம் மகிழ்ச்சி அடைந்திடுவோம்

2. ஒன்னா வந்து பாட்டு பாடி மகிழ்ச்சியோடு மத்தளம் கொட்டி
அன்பை பகிர்ந்திடுவோம் ஆட்டம் போட்டிடுவோம்
அறுவடை செய்திடுவோம் மகிழ்ச்சி அடைந்திடுவோம்

- பா : சகோ. ஆலன், பண் : சகோ. ஜான் பிரிட்டோ,
புனித பேதுரு பாப்பிறை குருமடம், பெங்களூர்

### பாடல் - 7 - மாடியறையிலே கூடியிருந்தோரை

மாடியறையிலே கூடியிருந்தோரைத்
தேடிவந்த தூய ஆவியே - 2

1. ஒளிந்து ஒளிந்து இருந்தாங்க இருந்தாங்க
ஆவி துணையால் சாட்சி சொன்னாங்க

2. பயந்து பயந்து நின்னாங்க நின்னாங்க
தூய ஆவி துணிவைத் தந்தாரு

எரேமியா வந்தாரு ஏட்டு சுருள உண்டாரு
குயவன் கையில் களிமண்தான் நாம என்று சொன்னாரு

எசேக்கியேல் வந்தாரு காட்சி ஒன்று கண்டாரு
உலர்ந்த எலும்பு கூடத்தான் உயிருள்ள உடம்பா மாறுச்சே

தானியேல் வந்தாரு கனவ விளக்கி சொன்னாரு
யாவே தான் உண்மையான கடவுள் என்று சொன்னார்

- சகோ. கிளமெண்ட், நல்லாயன் குருமடம், கோவை

## பாடல் - 16 - காகங்கள் கொண்டு உணவளித்து

காகங்கள் கொண்டு உணவளித்து
எலியாவுக்கு உதவி செய்தார்
சிங்கங்கள் வாய்களைக் கட்டிப்போட்டு
தானியேலுக்கு உதவி செய்தார்
எலியாவின் கடவுள் நம்ம கடவுள்
தானியேலின் கடவுள் நம்ம கடவுள் - 2

1. எலிசாவோடு உடனிருந்து
நாமானுக்கு நலமளித்தார்
சாமுவேலோடு உடனிருந்து
அரசர்களை உருவாக்கினார்
எலிசாவின் கடவுள் நம்ம கடவுள்
சாமுவேலின் கடவுள் நம்ம கடவுள் - 2

2. மீனை அனுப்பி காப்பாற்றி
யோனாவுக்கு உதவி செய்தார்
செங்கடலை பிளக்கச் செய்து
மோசேக்கு உதவி செய்தார்
யோனாவின் கடவுள் நம்ம கடவுள்
மோசேயின் கடவுள் நம்ம கடவுள் - 2

- திரு. விக்டர், சென்னை

## பாடல் - 17 - தர்ராங் தர்ராங் பஸ்ஸிலே

தர்ராங் தர்ராங் பஸ்ஸிலே
தர்ராரே பஸ்ஸிலே

1. காக்கானூரு பக்கத்துலே தோசக்கடை நம்ம கடை
காக்காக்கிட்ட தோச வாங்கின

2. நினிவேயூரு பக்கத்துலே மீனு கடை நம்ம கடை
மீன் வாங்கிப் போக வந்த
யோனா அண்ணன் நம்ம அண்ணன்



எப்போதும் நாங்க உண்மை பேசுவோம்
இயேசுவுக்காக நாங்க எதையும் செய்வோம்

- சகோ. சோர்வின் பிரின்ஸ், புனித பவுல் குருமடம், திருச்சி

## பாடல் - 10 - ஏலேலோ ஜலசா எல்லோ எல்லோ ஜலசா

ஏலேலோ ஜலசா எல்லோ எல்லோ ஜலசா
ஏலேலோ ஜலசா எல்லோ ஹெலோ ஜலசா
நான் சொன்னா கேட்பியா
அவர் சொன்னா கேட்பியா
யார் சொன்னா கேட்ப நீ
ஜீசஸ் சொன்னா கேட்பேன் நான்

1. அம்மாவோட செல்ல பிள்ளை நானுங்க
அப்பாவோட அருமை செல்லம் நானுங்க

2. ஞானத்தையும் மெய் உணர்வும் தேடிப் போகிறேன்
ஜீசஸ் கிட்ட கிப்ட்டா கேட்கப் போகிறேன்

3. ஞானத்தில் சாலமோனா வாழ போகிறேன்
ஜீசஸ் பிள்ளையா கலக்க போகிறேன்

- சகோ. அந்தோனி அருண் டைட்டஸ், புனித பவுல் குருமடம், திருச்சி

## பாடல் - 11 - Tring Tring Tring Ring

Tring Tring Tring Ring - 3
Ring Tring Ring
எங்கேயும் எப்போதும் சோம்பேறிடா கிட்டு
அவன் மதியம் வர தூங்குறான்டா நம்மை பிரண்டு பட்டு
நீயும் நானும் நல்ல பிள்ளைன்னு பேரு வாங்கணும் சிட்டு
சிடுசிடு என்று நாமும் இருந்தா நம்ம பேரு ஹிட்டு

1. எறும்ப பாரு எறும்ப பாரு அது எப்போது தூங்குச்சி
மொபைலும் டிவியும் நம்மள சோம்பேறி யாக்கச்சி
என்ன பண்ண என்ன பண்ண சொல்லுங்க அண்ணாச்சி
போலாமா போலாமா இயேசு கிட்ட தங்கச்சி
Hahaha hahaha hahaha hahahah..?

- சகோ. யங்கர்சென், புனித பவுல் குருமடம், திருச்சி

## பாடல் - 12 - டும் டும் டும் மேளம் கொட்டுவோம்

டும் டும் டும் மேளம் கொட்டுவோம்
பிப்பி பிப்பி குழழ் ஊதுவோம்
ஜல் ஜல் ஜல் தாளம் தட்டுவோம்
அல்லேலூயா என்று பாடி கைகள் தட்டுவோம்

1. நம் தந்தை இறைவனை வணங்கிடுவோம்
இறைமகன் இயேசுவுக்கு கரங்கள் உயர்த்துவோம்
தூய ஆவி கொடைகளுக்காய் கரங்கள் அசைப்போம்
மூவொரு இறைவனுக்காய் கைகள் தட்டுவோம்

2. நாமெல்லாம் வீரர்களாய் புறப்படுவோம்
பெரியோர்கள் சொல்வதை கேட்டிடுவோம்
நீதிமொழி படித்து வாழ்ந்திடுவோம்
கடவுளுக்கு சாட்சிகளாய் வாழ்ந்திடுவோம்

- திரு. செல்வராஜ், வேதியர், திருச்சி

## பாடல் - 13 - லாலலா லல்லால லாலலா

லாலலா லல்லால லாலலா - லாலலா லாலலா லாலலா - 2
இஸ்ரயேல் மக்களை நல்வழி நடத்த (ஓஹோ)
இறைவாக்கை எல்லாருக்கும் சொல்லிடத்தானே (அதுக்கு)
நல்லவங்க நெறைய பேரு தேவைப்பட்டாங்க (அப்புறம்)
அவங்கதான் இறைவாக்கினருன்ன சொன்னாங்க (நல்லது)

1. எரேமியா ஒலகத்துல பிறக்குமுன்னே
கடவுள் அவரை அருள்பொழிவு செய்திட்டாரு
லல்ல லல்லலா லலல லலலலா
லல்லலா லல்லலா லலலலா
லல்லலா லல்லலா லலலலா
எரெமியா ஒலகத்துல பிறக்குமுன்னே
கடவுள் அவரை அருள்பொழிவு செய்திட்டாரு
வார்த்ய சொல்றதுக்குப் பயந்து போனாரு - 2
புலம்பிக்கிட்டே கடவுள்கிட்டத் திரும்பி வந்தாரு - அவரு
திரும்பி வந்தாரு
லாலலா லல்லால லாலலா - லாலலா லாலலா லாலலா - 2

2. ஆண்டவரு அவருக்கிட்ட இருக்கேன் சொன்னாரு
ஆறுதல் அடைந்ததுமே மக்களைப் பாத்தாரு
லல்ல லல்லலா லலல லலலலா
லல்லலா லல்லலா லலலலா
ஆண்டவரு அவருக்கிட்ட இருக்கேன் சொன்னாரு
ஆறுதல் அடைந்ததுமே மக்களைப் பாத்தாரு
துணிவுடன் கடவுளின் வாக்கைச் சொன்னாரு - 2
கடவுளுக்கு ஏத்தபடி பணியும் செய்தாரு - அவரு
பணியும் செய்தாரு
லாலலா லல்லால லாலலா - லாலலா லாலலா லாலலா - 2

- பா : சகோ. ஞான அபிஷேக், பண் : அருள்பணி. ரோலிங்டன்,
நல்லாயன் குருமடம், கோவை



## பாடல் - 14 - கடவுளின் வார்த்தையால்

Praise - 3 Praise the Lord...
நாம Happy - 2 கடவுளின் வார்த்தையால் ... 2
இறைவாக்கினர்கள் யாரு
கடவுளைக் காட்டும் Little Star ரு
இறைவாக்கினர்கள் யாரு
கடவுளின் வாய்மொழியா வாழ்ந்த நபரு
Chorus : நாம எல்லோரு ஆகனு Prophet ஆ...
அதுக்கு கடவுள் வார்த்தை நமக்கு தேவை Perfect ஆ...
(இறைவாக்கினர்...)

1. Left Right... 3 ஹே...
ஆவியாலே உந்தப்பட்ட ஆன்மாக்கள் - அந்த ஆன்மாக்கள் - 2
ஆண்டவரின் வார்த்தையாலே மக்கள் வாழ்வை மாற்றினார்கள் - 2
(நாம எல்லோரு...)

2. டும் டும் டும் டும் ... 6
துன்பத்திலும் ஆண்டவரை துதிச்சாங்க - மகிழ்ந்து துதிச்சாங்க - 2
இன்பமாக எல்லோரும் இறைவன் பணி செய்தாங்க - 2

3. Hi... Bye... 3 Jesusக்கு - 2
குகையில் தள்ளினாலும் குதூகலமா ஜெபிச்சாங்க - அவங்க ஜெபிச்சாங்க - 2
குயவன் கையில் மண்பாண்டம் நாங்கள் என்று சொன்னாங்க - 2

4. Left Right... 3 ஹே...
உலர்ந்த எலும்புக்கும் இறைவாக்கு உரைச்சாங்க - அவங்க உரைச்சாங்க - 2
பாழ் கிணற்றிலும் மகிழ்ச்சியாக உன்னதர் புகழ் பாடினாங்க - 2

5. தாய் வயிற்றில் கருவாகும் முன்பாக - வரும் முன்பாக - 2
ஆண்டவரால் அப்போதே அபிஷேகம் ஆனாங்க - 2

- சகோ. இயேசு மரிய கிளண்டன், நல்லாயன் குருமடம், கோவை

## பாடல் - 15 - கடவுளின் வார்த்தையை எடுத்து சொல்ல

கடவுளின் வார்த்தையை எடுத்து சொல்ல
பூமியிலே பொறந்தாங்களே
இறைவாக்கினர் இங்கே வந்தார்களே
அவர் சொன்ன எல்லாம் செஞ்சாங்களே - 2

ஏலேலோ ஐலசா ஏலேலோ ஐலசா - 4

எசாயா வந்தாரு ஆறுதலும் நம்பிக்கையும் தந்தாரு
இம்மானுவேல் நம்மையும் மீட்பார் என்றும் சொன்னாரு

கடவுள் கூப்பிட்டார்... கடவுள் கூப்பிட்டார்
கீழ்ப்படியும் பிள்ளையுடன் கடவுள் பேசுவார் - 2

குதிரைமீது சவுலு - டுக்டக் டுக்டக் டுக்டக் டுக்
பயணமாகும்போது - டுக்டக் டுக்டக் டுக்டக் டுக்
இயேசு கூப்பிட்டார் இயேசு கூப்பிட்டார்
கீழ்ப்படியும் பிள்ளையுடன் இயேசு பேசுவார் - 2

- திரு. விக்டர், சென்னை

## பாடல் - 25 - பேதுருவும் இயேசுவும்

பேதுருவும் இயேசுவும் இயேசு கூட சீடரும்
விருந்துக்கு மார்த்தா மரியா வீடு போனாங்க

மார்த்தா called மரியா cook cook cook
மரியா called மார்த்தா pray pray pray
பேதர கத்தினார் food food food
ஜீசஸ் சொன்னாரு shuu shuu shuu

எல்லோரும் பிசி (busy) பேதுருக்கு பசி
சாப்பாடோ ருசி Jesus o குஷி

- சகோ. ஜெரால்டு, புனித பவுல் குருமடம், திருச்சி

## பாடல் - 26 - சின்ன பையன் சாமுவேலு

சின்ன பையன் சாமுவேலு தூக்கத்துல
யாரோ அவர கூப்பிட்டாங்க
அவரு ஏலி கிட்ட கேட்டாரு
Did u call me
ஏலி said no - 3

டங்கு டக்கர டங்கு டக்கர டங்கு டக்கர் டங் - 3
டங் டங் டங்

ரெண்டு தடவை மூணு தடவை இது நடக்க
ஏலி சாமுவேல் கிட்ட சொன்னாரு
இனி உன்னை கூப்பிட்டா
say, yes my lord

- சகோ. அந்தோணி மதன், புனித பவுல் குருமடம், திருச்சி





3. சிங்கப்பூரு பக்கத்துலே சோத்துக்கடை நம்ம கடை
   சிங்கங்களைப் பட்டினி போட்ட
   தானியேல் அண்ணன் நம்ம அண்ணன்

4. சுடுகாட்டுப் பக்கத்துலே எலும்புக்கடை நம்ம கடை
   எலும்புகளை வாங்க வந்த
   எசேக்கியேல் அண்ணன் நம்ம அண்ணன்

5. யூதேயாவின் பக்கத்துலே தலைக்கடை நம்ம கடை
   ஏரோதுக்கு தலை கொடுத்த
   யோவான் அண்ணன் நம்ம அண்ணன்

6. ஜோலார்பேட்டை பக்கத்துலே ஜோஸ்ய கடை நம்ம கடை
   ஜோஸ்யம் பார்த்துச் சொல்லி வந்த
   ஏசயா அண்ணன் நம்ம அண்ணன்

7. சேலையுரு பக்கத்துலே சேலைக்கடை நம்ம கடை
   சேலை வாங்க வந்துபோன
   ஓசியா அண்ணன் நம்ம அண்ணன்

8. மைலாப்பூரு பக்கத்துலே கருவாட்டுக்கடை நம்ம கடை
   கருவாடு வாங்க வந்த
   தோமா அண்ணன் நம்ம அண்ணன்

- திரு. விக்டர், சென்னை

## பாடல் - 18 - காலையிலே எழுந்தாரு

காலையிலே எழுந்தாரு மகதலா மரியா எழுந்தாரு
கல்லறைக்குத்தான் விரைந்தாரு
மகதலா மரியா விரைந்தாரு

1. கல்லறைக்கு உள்ளே எட்டி எட்டிப் பார்த்தாரு
   இயேசுவைக் காணோம் தேடி அலைந்தாரு

2. உயிர்த்த இயேசு எதிரே நின்னாரு
   'மரியே' என்று தன்னைக் காட்டினாரு

3. உயிர்த்த தெய்தியைச் சொல்லச் சொன்னாரு
   மகதலா விரைந்தார் மகிழ்ச்சி நிறைவோடு

4. உண்மையாய் நீயும் இயேசுவை தினம் தேடு
   அருகில் இருப்பார் மகிழ்வுடன் நீ பாடு

- திரு. விக்டர், சென்னை

## பாடல் - 19 - எஸ்தரைப் பாரு

எஸ்தரைப் பாரு! எஸ்தரைப் பாரு
எஸ்தரைப் பாருங்கள்!
அகஸ்வேரின் அரசியான எஸ்தரைப் பாருங்கள்!

1. யூதர்களை அழித்திடவே
திட்டம் போட்டானே - ஆமான் திட்டம் போட்டானே
அரசனிடம் பொய்யைச் சொல்லி
சட்டம் போட்டானே - பொல்லா சட்டம் போட்டானே

2. ஆமானின் சதி செயலை
முறியடித்தாரு - எஸ்தர் முறியடித்தாரு
அழிவிலிருந்து யூதர்களைக்
காப்பாற்றினாரு - எஸ்தர் காப்பாற்றினாரு

3. அழிக்க நினைத்த ஆமானோ
அழிந்து போனானே - ஆமா அழிந்து போனானே
ஆண்டவரை நம்பினதால்
வாழ்வு பெற்றாரே - நல்ல வாழ்வு பெற்றாரே

- திரு. விக்டர், சென்னை

## பாடல் - 20 - சின்ன பாப்பா எங்ககூட இயேசுருக்காரு

சின்ன பாப்பா எங்ககூட இயேசுருக்காரு
செல்லப் பாப்பா எங்ககூட இயேசுருக்காரு
ஜாலியாக நாங்கள் ஆடிப்பாடுவோம் - 2

1. நடக்கும் போது கூட இருப்பாரு - பாடம்
படிக்கும் போதும் கூட இருப்பாரு
எப்பொழுதும் இயேசு கூட இருப்பாரு - 2

2. ஆபத்திலே கூட இருப்பாரு - நம்மைக்
காப்பாற்றிட வந்திடுவாரு
எப்பொழுதும் இயேசு கூட இருப்பாரு - 2

- திரு. விக்டர், சென்னை

## பாடல் - 21 - சாத்தானுக்கு No சொல்லுங்க

சாத்தானுக்கு No சொல்லுங்க
இயேசுவுக்கு Yes சொல்லுங்க

சண்டை போட No சொல்லுங்க
சமாதானம் செய்ய Yes சொல்லுங்க

பொய்யைச் சொல்ல No சொல்லுங்க
உண்மை பேச Yes சொல்லுங்க



கோபமாய் இருக்க No சொல்லுங்க
மகிழ்ச்சியாய் வாழ Yes சொல்லுங்க

- திரு. விக்டர், சென்னை

## பாடல் - 22 - கதவைத் தட்டும் சத்தம்

கதவைத் தட்டும் சத்தம் கேட்குதா? - இயேசு
கதவைத் தட்டும் சத்தம் கேட்குதா?

டொக்கு டொக்கு டொக்குன்னு
டொக்கு டொக்கு டொக்குன்னு
கதவைத் தட்டும் சத்தம் கேட்குதா - 2

திறந்து கொடுத்தாக்க... உள்ளே வருவாரு
நம்மோடு விருந்து உண்பாரு - 2

இயேசு ஆண்டவர் நம்மோடிருந்தால்
எப்பொழுதும் வெற்றி வெற்றிதான் - 2

- திரு. விக்டர், சென்னை

## பாடல் - 23 - VBSக்கு வந்தீங்களா?

VBSக்கு வந்தீங்களா? ஆமா! ஆமா! ஆமா!
நாங்க வந்தோங்க!
விவிலியத்தைப் படிப்பீங்களா? - ஆமா! ஆமா! ஆமா!
நாங்க படிப்போங்க!

ஆட்டம் ஆடுவோம்!
பாட்டுப்பாடுவோம்!
VBSஐக் கொண்டாடுவோம்

ஜாலி ஜாலி ஜாலியாக் கொண்டாடுவோம்
ஜாலியாக VBSஐக் கொண்டாடுவோம்

- திரு. விக்டர், சென்னை

## பாடல் - 24 - டம்டும் டம்டும் டம்டும் டம்டும்

டம்டும் டம்டும் டம்டும் டம்டும் - மேளம் கொட்டுங்க
ஜல்ஜல் ஜல்ஜல் ஜல்ஜல் ஜல்ஜல்
தாளம் தட்டுங்க - பேங் பேங் பேங்குன்னு
கீபோர்ட் வாசிங்க
டிங் டிங் டிங்டிங் டிங்டிங் டிங்டிங் - கிட்டார் அடிங்க

சின்னப் பையன் சாமுவேல்
கொர் கொர் கொர்...
படுத்துத் தூங்கும் போது
கொர் கொர் கொர்...